பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 16 வெள்ளிக்கிழமை 01.08.2025 கதிர் 265

## இனி இது ரகசியம் அல்ல!

சமூக ஊடகங்கள் மற்றும் இணையப்பாவனைப்பெருக்கத்துடன் பாலியல் துஸ்பிரயோகங்களும் அதிகரித்துள்ளன. குறிப்பாக போஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ☞ 2

# அமெரிக்காவின் 30 சதவீத வரி இன்று முதல் நடைமுறைக்கு

## பெரும் சவாலைச் சந்திக்கப்போகிறது இலங்கை

அமெரிக்காவின் தீர்மானத்தின் தற்போதைய நிலைவரத்தின் படி இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு இன்றிலிருந்து 30 சதவீத தீர்வை வரி நடைமுறைக்கு வரும். இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிப்பானது ஏற்றுமதி சந்தையில் இலங்கைக்கு பெரும் சவாலாக அமையுமென பொருளாதார நிபுணர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் வரிவிதிப்பு இன்றிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. தற்போது இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுள்ள 30 சதவீத வரியில் ஏதேனும் சலுகைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது இன்று அல்லது எதிர்வரும் வாரங்களில் கிடைக்கக் கூடும். எவ்வாறிருப்பினும் இன்று முதல் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 சதவீத வரி செலுத்தப்பட வேண்டும்.

அதற்காக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் இலங்கையில் அதிகரிக்கப்படாது. அந்த வகையில் ஏற்றுமதியூடாக மிகக் குறைந்த இலாபமே கிடைக்கப் பெறும். எவ்வாறிருப்பினும் மில்லியன் கணக்கான உற்பத்திகள் மூலம் பாரிய வருமானத்தைப் பெற முடியும். ☞ 2

# செம்மணி புதைகுழியில் நேற்றும் 3 எலும்புக்கூடுகள் அடையாளம்





யாழ்.செம்மணியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்றையதினம் வியாழக்கிழமை புதிதாக 03 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 03 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அதன் அடிப்படையில் கடந்த 11 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில், 40 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் ☞ 3

# அரச ஊழியர் சம்பள முரண்பாடுகளை ஆராய்வதற்குத் தனிக் குழு நியமனம்

அரச சேவையில் தற்பொழுது நிலவும் சம்பள முரண்பாடுகள் மற்றும் அது சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியராச்சி தலைமையில் உப குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் அபயரத்னவின் தலைமையில் மற்றும் பிரதி அமைச்சர் ருவன் செனரத உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலில் அண்மையில் இடம்பெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

தற்பொழுது நடைமுறையிலுள்ள பொதுநிர்வாக சுற்றுநிருபம் 6/2006 மற்றும் 3/2016 என்பவற்றின் மூலம் அரச சேவையில் ☞ 2

# திருமலையில் விவசாயக் காணிகள் இந்திய நிறுவனத்துக்கு விற்பனை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதில்லை எனக்கூறி ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு தற்போது திருகோணமலை முத்துநகரில் மக்களின் விவசாய காணிகளை இந்திய நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்திருக்கிறது. அதேபோன்று டொக்யாட்டையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் தான் இவ்வாறு ☞ 2

# மனிதாபிமான அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுவிக்குக

## அமைச்சரிடம் நேறில் வலியுறுத்து

ஜே.வி.பி.யினருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது போன்று தமிழ் அரசியல் கைதிகளையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்காரவைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தை தான் காதுகளால் கேட்கவில்லை என்றும் இதயத்தால் கேட்பதாகவும் தெரிவித்த நீதி அபமைச்சர் சட்டக் கட்டமைப்பிற்குள் இருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில், நீதி அமைச்சருடனான சந்திப்புப் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு நீதி அமைச்சின் அலுவலகத்தில், நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில், 15 முதல் 30 வருடங்கள் ஶ்ரீலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு ☞ 3

# அநுர நாடு திரும்பினார்

மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து அரசுத் தலைவர் அநுரகுமார புதன்கிழமை இரவு நாடு திரும்பினார். மாலைதீவு அரசுத் தலைவரின் கலாநிதி முகமது முய்சுவின் அழைப்பின் பேரில் அரசுத் தலைவரின் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த உத்தியோகபூர்வ பயணத்தின்போது அரசுத் தலைவரின் அநுரகுமார அரசுத்தலைவரின் கலாநிதி முகமது முய்சுவுடனும் மாலைதீவு அமைச்சரவை அமைச்சர்கள் ☞ 2

# 7 மாதங்களில் மட்டும் 238 யானைகள் சாவு

மனித செயற்பாடுகள் காரணமாக இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 238 காட்டுயானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் ஜுலை 22 வரையிலான காலப்பகுதியிலேயே காட்டு யானைகள் இவ்வாறு உயிரிழந்துள்ளதாவும் யானை மனித மோதல் காரணமாக நாட்டில் ☞ 2

# சர்வதேச ஆணையளிக்கப்பட்ட பொறிமுறை மனிதப்புதைகுழி அகழ்வுகளில் அவசியம்

## பிரித்தானிய தமிழ் பேரவை

செம்மணி, கொக்குத்தொடுவாய் மற்றும் மன்னார் என்பன உள்ளடங்கலாக அடையாளங்காணப்பட்ட மற்றும் சந்தேகிக்கப்படும் மனிதப்புதைகுழிகளைப் பொறுப்புடன் கையாள்வதற்குரிய சர்வதேசத்தினால் ஆணையளிக்கப்பட்ட பொறிமுறையை உருவாக்கப்படவேண்டும் எனவும், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளில் சர்வதேச தடயவியல் மற்றும் விசாரணை நிபுணர்கள் உடனடியாக உள்வாங்கப்படவேண்டும் எனவும் பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பில் பிரித்தானியத் தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உலகளாவிய ரீதியில் இன்னமும் தீர்க்கப்படாத அதிக எண்ணிக்கையான வலிந்துகாணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாகவும், அதன் நீட்சியாக தற்போது கண்டறியப்பட்டிருக்கும் செம்மணி மனிதப்புதைகுழி நாட்டில் தொடர்ந்து நிலவும் மனித உரிமைகள் நெருக்கடியை நினைவுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் சர்வதேச ☞ 3

# ரோஹித எம்.பியின் மகளுக்கு நேற்றுக் கிடைத்தது பிணை

சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு தவறான தரவுகளை சமர்பித்து மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேயகுணவர்தனவின் மகள் ரோசெல் மெலனியை பிணையில் செல்ல மத்துகம நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சந்தேக நபர் நேற்று மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் தலா 2 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணை களில் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார். ☞ 2

## இனி இது .....

ஊடகப் பக்கங்களில் பகிரப்படும் பெண்களின் படங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பாலியல் துஸ்பிரயோகங்களும் குற்றங்களும் மிகப் பெரியளவில் இடம்பெறுகின்றன. என்றாலும் அவை குறித்து அதிகம் வெளியே தெரியவருவதில்லை. இதுவே குற்றவாளிகளுக்குச் சாதகமாகிப் போவதால் அவர்கள்பாடு படு கொண்டாட்டமாகவே சென்றுவந்தது. ஆனால் அதற்கு ஆப்பு வைக்கும் காலம் வந்துவிட்டது என்பதை கொழும்பு நீதிமன்றம் குறிப்புணர்த்தியுள்ளது.

அழகான பெண்களின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்தி, ஆபாசக் கதைகளைப் பரப்பிய 'யூடியூப்' வலையொளி நடத்திய கடுவெல பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத காலச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க நேற்றுத் தீர்ப்பளித்தார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக இருந்த திமுத்து சாமர (டோபியா) என்ற நபருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்புப் பகுதியில் உள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த வழக்கைத் தாக்கல் செய்தது.

ஆபாசக் கதைகளை ஒளிபரப்பும் 'யூடியூப் சேனல்' தனது ஒளிப்படத்தைப் பயன்படுத்துவதாக ஆசிரியை ஒருவர் துணிந்து அளித்த புகாரின் அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது.

இதுபோன்று இத்தகைய குற்றங்கள் குறித்து உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்வதன் மூலம் உடனடித் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். தமிழிலும் இத்தகைய ஆபாசக் குற்றங்களுக்குக் குறைவில்லை.

...........................

ஈ.பி.எவ் எனப்படும் ஊழியர் வருங்கால வைப்புநிதிக்கு செலுத்தவேண்டிய தொகையை இலங்கையில் உள்ள பெருபாலான சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் செலுத்துவதில்லை. இது ஒருவகையில் தொழிலாளர் சுரண்டல். ஒரு ஊழியர் ஒரு மாதமே பணியில் இருந்தார் எனினும் அவருக்கான ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றைச் செலுத்தவேண்டியது கட்டாயம் என்பது சட்டமாக இருந்தாலும் அதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்த வேண்டிய அரச திணைக்களங்களும் முதலாளிகளுக்கு ஆதரவாகவே செயற்படுவதைக் காணமுடியும். ஊழியர்கள் சுரண்டப்படுவது இங்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு குற்றமாகவே மாறிவிட்டது.

இந்த நிலை தனியார் நிறுவனங்களில் மட்டுமல்ல அரச கட்டுப்பாட்டில் இருக்கும் நிறுவனங்களிலும்கூட நடக்கிறது என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது பொது நிறுவனங்கள் மீதான நாடாளுமன்றக் குழு (கோப்).

ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சார்பில் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை செலுத்தப்படாததால் ரூ.240 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரச கணக்காய்வாளர் நாயகம் பொது நிறுவனங்கள் மீதான நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில், உரிய காலத்தில் ஊழியர் வருங்கால வைப்பு நிதியைச் செலுத்தாதால் 2006 முதல் 2022 வரை கூடுதல் கட்டணமாக அரச மரக் கூட்டுத்தாபனம் ரூ.120 மில்லியனுக்கும் அதிகமாகச் செலுத்தியுள்ளது என்பதையும் குழு வெளிப்படுத்தியுள்ளது. ஆக மொத்தத்தில் இவர்களுக்கெல்லாம் இருக்கும் பிரச்சினை பணம் அல்ல. ஊழியர்களின் உரிமைகள் மீதான அலட்சியமே!

அரச நிறுவனங்களே இப்படி இருக்கையில் தனியார் நிறவனங்களை எங்கே கட்டுப்படுத்தப் போகிறார்கள்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அமெரிக்காவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள வரியுடன் எம்முடன் போட்டியிடும் நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை ஒப்பிட்டு பார்ப்ப வேண்டிய தேவை காணப்படுகிறது. இலங்கைக்கு போட்டியான நாடுகளுக்கு எம்மை விட குறைவான வரி விதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அது எமக்கு சவாலாக அமையும்.

கம்போடியா, தாய்லாந்து, மலேசியா, இந்தியா, வியட்நாம், இந்தோனேஷியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளே தற்போது எமக்கு போட்டியாகவுள்ளன. இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இது குறிப்பிடத்தக்க போட்டித்தன்மையை எமக்கு ஏற்படுத்தும்.

இலங்கை தனக்கு கிடைக்கப் பெற்றுள்ள வரியை குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதைப் போன்று, இந்தியாவும் இன்னும் வரியைக் குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வாய்ப்புள்ளது. வியட்நாம், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு எம்மை விட குறைவான வரி கிடைத்துள்ளதால் அந்த சவாலை எதிர்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பால் அடிக்கடி வரி திருத்தம் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதற்கமைய எதிர்காலத்திலும் மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். எவ்வாறிருப்பினும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் போட்டியிடுவது எமக்கு சவாலாகவே இருக்கும் என்றார்.

## அரச ஊழியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பளம் தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்படுவதாகவும், அரச சேவையில் பல்வேறு பதவிகளுக்கான கடமைகள் திட்டவட்டமாக இல்லை என்பதும், பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பொருத்தமின்மைகள் காரணமாக அதிருப்தியான நிலைமையினால் இது தொடர்பில் பல்வேறு விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டதாக இங்கு கருத்துத் தெரிவித்த உப குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதற்கமைய, அரச சேவையின் தொழிமுறையை உயர்த்துவதற்கு தற்பொழுது காணப்படும் பதவிகள் மற்றும் அவற்றுக்கான கடமைகள், சம்பள அளவு போன்றவை தொடர்பில் விஞ்ஞானரீதியாக மீளாய்வுக்குப் பின்னர் ஒட்டுமொத்த அரச சேவைக்கு புதிய சம்பள அமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவுகளை இந்த உப குழுவின் மூலம் முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட நிர்வாகத் துறையுடன் சம்பந்தபந்தப்பட்ட சிக்கல்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அதற்கமைய, அதற்கான தலையீட்டை விரைவாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினர். பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலரும் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## அநுர நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட அரச பிரதானிகளுடன் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்களையும் நடத்தினார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொடர்பான ஒப்பந்தம் மற்றும் மாலைதீவு வெளியுறவு சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவும் பரிமாறப்பட்டன.

'குரும்பா மோல்டீவ்ஸ்' விடுதியில் அரசுத் தலைவரின் க்கு மாலைதீவு அரசுத் தலைவரின் கலாநிதி முகமது முய்சு விசேட இராப்போசன விருந்துபசாரம் அளித்தார்.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையே இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் 60 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தலைநகர் மாலேயில் உள்ள சுல்தான் கார்டனில் அரசுத் தலைவரின் மரக்கன்றொன்றை நட்டார்.

மேலும் மாலைதீவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை வர்த்தக சபையின் இலங்கை-மாலைதீவு வணிக கவுன்சில் ஏற்பாடு செய்த வணிக மன்றத்திலும்இ மாலைதீவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த மாலைதீவில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்தித்து அரசுத் தலைவரின் உரையாற்றினார்.

இந்த உத்தியோகபூர்வ பயணத்தின் போதுஇ 60 ஆண்டுகளாக இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல் நம்பிக்கை மக்களுக்கு இடையிலான நெருக்கமான உறவுகள் மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நட்பு மற்றும் பன்முக ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்து அரசுத் தலைவரின் அநுரகுமார இங்கு வலியுறுத்தினார்.

அதற்கமைய இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு தரப்பினரும் உடன்பாடு தெரிவித்தனர்.

வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவினரும் இந்த பயணத்தில் இணைந்தனர்.

## 7 மாதங்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 74 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் வனஜீவராசிகள் திணைக்கள தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் 20 இறப்புகளும் கிழக்கு மாகாணத்தில் 15 இறப்புகளும் அநுராதபுரம் மாவட்டத்தில் 10 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி, ஊவா மாகாணம், புத்தளம் மற்றும் பொலன்னறுவை, அநுராதபுரம், கிழக்கு மாகாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார் உள்ளிட்ட இடங்களிலேயே மனித செயற்பாடுகள் காரணமாக காட்டு யானைகள் உயிரிழந்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் துப்பாக்கிச்சூடு, மின்சாரம் தாக்கல் மற்றும் ஹக்கபடஸ் (வாய்வெடி ) போன்ற சம்பவங்கள் காரணமாகவே அதிகளவு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காட்டு யானைகளை சுட்டுக்கொல்லுதல், சட்டவிரோத மின்கம்பிகளை பயன்படுத்தி யானைகளை கொல்லுதல் மற்றும் ஹக்கபடஸ் (வாய்வெடி) போன்றவற்றினை பயன்படுத்தி காட்டு யானைகளை கொல்லுபவர்களை கைது செய்வதற்காக வேண்டி வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் திணைக்களம் கோரியுள்ளதோடு இதன் மூலம் காட்டு யானைகளின் இறப்பு வீதத்தினை குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகிறததென ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பதவிக்கு வந்த பின்னர் இதுவரை 6 நாடுகளுக்கு உத்தியோகபூர் பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார். ஆனால் ஆளும்தரப்பு இவ்வாறு வெளிநாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் எதுவும் நாட்டுக்கு வெளிப்படுத்தியதில்லை.

குறிப்பாக இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளிவருகின்றன. ஆனால் ஆளும்தரப்பு அதுதொடர்பில் எந்த கருத்தையும் தெரிவிப்பதில்லை. ஆளும்தரப்பு இவ்வாறு இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை மறைப்பதாக இருந்தால், அதில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயங்கள் இருக்க வேண்டும். அதனாலே அதனை வெளியிட அச்சப்பட்டு வருகிறது.

திருகோணமலை முத்துநகரில் பல ஆண்டு காலமாக விவசாயம் செய்துவந்த நிலத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த மக்கள் இன்று வீதிக்கிறங்கி போராடி வருகின்றனர்.

அதேபோன்று கப்பல்கள் திருத்தும் டொக்யாட் நிறுவனத்தையும் இந்திய நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு இவ்வாறு செயற்படுவது இந்திய அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலா என்ற சந்தேகம் எழுகிறது.

ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும்போது பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்திருந்தார். அதன்போது அவர் அந்த விஜயத்தின் மூலம் நாட்டுக்கு ஏதாவது நன்மையை பெற்றுக்கொண்டே நாடுதிரும்புவார். ரணில் விக்கிரசிங்க இவ்வாறு உத்தியோகபூர் விஜயங்களை மேற்கொண்டால், அந்த விஜயத்தின் பின்னர், அதுதொடர்பில் நாட்டுக்கு அல்லது நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்துவார். ஆனால் அரசுத் தலைவரின் அநுரகுமார திஸாநாயக்க இதுவரை 6 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். அதன் மூலம் நாட்டுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது என யாருக்கும் தெரியாது.

அதேநேரம் உற்பத்தி பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்து, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகவே அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு தெரிவித்துவந்தது. ஆனால் இன்று செவனகல சீனித் தொழிற்சாலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான உரத்தை உரிய நேரத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்க தவறி வருவதால் குறிப்பாக நெற்பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு நாட்டின் உற்பத்திகள் வீழ்ச்சியடையும்போது அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்காமல் அரிசி, சீனி போன்ற பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவே ஆர்வம் காட்டிவருகிறது. இதன்மூலம் ஆளும்தரப்பு பாரிய லாபத்தை பெறுகிறது என்றார்.

## ரோஹித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலான ஊழல் தடுப்பு பிரிவில் நேற்று முன்தினம் சரணடைந்த அவரிடம் விசாரணை அதிகாரிகள் சுமார் 9 மணித்தியாலயங்கள் வாக்குமூலம் பதிவு செய்து அதன் பின்னர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தினர்

இதனிடையே குறித்த விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் மகன் ரசிக்க விதானகேவும் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் ரசிக விதான தவறான தரவுகளுடன் பதிவு செய்யப்பட்ட ஜீப் தொடர்பாக அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த ஜீப்பை பரிசோதனை செய்த போது அது சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு தவறான தரவுகளை சமர்ப்பித்து மோட்டார் போக்குவரத்துத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

ஜகத் விதானவுக்குச் சொந்தமான தனியார் நிறுவனத்தின் பெயரில் இரண்டாவது முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஜீப்பை அவரது குடும்பத்தினர் பயன்படுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தது.

விசாரணையின் போது கைது செய்யப்பட்ட ரசிக விதான நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் ரோசெல் மெலனி அபேகுணவர்தனவிடமிருந்து அந்த ஜீப்பை வாங்கியதாகக் வாக்கு மூலம் அளித்திருந்தார்.

அந்த வாக்கு மூலத்தை மையப்படுத்தி மேலதிக விசாரணைகளுக்காக கடந்த 19ஆம் திகதி மதியம் களுத்துறை நாகொடவில் உள்ள ரோசெல் மெலனி அபேகுணவர்தனவின் வீட்டிற்கு வலான மோசடி தடுப்பு சிறப்பு படையினர் சென்றுள்ளனர். ஆனால் அவரும் அவரது கணவரும் அங்கு இருக்கவில்லை.

அதன்படி வலான மோசடி தடுப்பு சிறப்பு படையினர் முன் வைத்த விடயங்களை ஆரயந்த மத்துகம நீதிவான் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் மற்றும் மருமகனுக்கு வெளிநாட்டு பயணத் தடையை பிறப்பித்திருந்தார்.

இந்த பின்னணியில் ரோஹித்தவின் மருமகன் மன்றில் முன்னிலையாகிமையடுத்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து அவரது மகளும் பொலிஸில் சரணடைந்ததையடுத்து அவரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## மனிதாபிமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்களின்குடும்பஉறுப்பினர்கள்,தங்கள் உறவினர்களின் நீண்டகால சிறைவாசம் காரணமாக தாங்கள்எதிர்கொண்டஉளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களை கண்ணீருடன் எடுத்துரைத்தனர். தங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறுஅமைச்சரிடம்கூட்டாககோரிக்கை விடுத்தனர்.

இலங்கையின் இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும்.

கடந்த காலத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு, மற்றும் போருக்கு பின்னர் 12,000 விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பல வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையினை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை முன்வைத்தது.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. நீதி அமைச்சர் ஹர்ஷ நானயக்கார அவர்கள் கோரிக்கைகளை, தான் 'காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்' என்று குறிப்பிட்டு, சட்ட கட்டமைப்பிற்குள் இருந்து இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு சார்ந்த விடயங்கள் அரசுத் தலைவரின் யின் அதிகாரத்தின் கீழ் வருகின்றமையால், அரசுத் தலைவரின் யின் கவனத்திற்கு கொண்டு சென்று தொடர்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பானது கடந்த ஜனவரி 2025 முதல் அரசுத் தலைவரின் மற்றும் பிரதமர் உடனான எழுத்துமூல கோரிக்கைக்கு அமைவாக இடம்பெற்றது என்றார்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றையதினம் 26 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி கடந்த 11ஆவது நாட்களாக முன்னெடுக்கப்படும் நிலையில் தற்போது வரையில் 40 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 35 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் போது, நேற்றுவரையில் அகழ்ந்து எடுக்கப்பட்ட 03 எலும்பு கூட்டு தொகுதியுடனுமாக 105 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 118 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜூரர்கள்ஆணைக்குழுசுட்டிக்காட்டியிருக்கிறது.

1999 ஆம் ஆண்டு செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து 15 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்ட போதிலும், அதுகுறித்த விசாரணைகள் நம்பத்தகுந்தவாறான விளக்கமளித்தல் இன்றி அதே ஆண்டில் இடைநிறுத்தப்பட்டன. அதுமாத்திரமன்றி அம்மனிதப்புதைகுழியுடன் தொடர்புடைய சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், சட்டவிரோத படுகொலைகள் மற்றும்வலிந்துகாணாமலாக்கப்படல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள், குறிப்பாக உத்தரவிடும் பொறுப்பில் இருந்த எந்தவொரு நபரும் தற்போதுவரை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

அத்தோடு யாழ் மாவட்டம் பாதுகாப்புப்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த 1996 - 1998 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் காணாமல்போனதாக முறைப்பாடளிக்கப்பட்டுள்ள 628 பேர் எங்கே? அவர்களுக்கு என்ன நேர்ந்தது எனக் கண்டறியும் செயன்முறையில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் சர்வதேச மேற்பார்வை உடனடியாக உள்வாங்கப்படவேண்டியது அவசியம் என சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியிருக்கிறது. செம்மணி, மன்னார் உள்ளடங்கலாக கடந்த காலங்களில் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் உண்மையையும், நீதியையும் நிலைநாட்டுவதற்குத் தவறியிருக்கின்றன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து சகல நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் ஆகிய இரண்டையும் இலங்கை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதன்கீழானகடப்பாடுகளைநிறைவேற்றுவதில் தோல்வியடைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் செம்மணி தொடர்பான விசாரணைகள் மனித எச்சங்களைக் கண்டறிதல் என்பதற்கு அப்பால் செல்வதற்கு சர்வதேச சட்டத்தின் பிரயோகம் இன்றியமையாததாகும். இக்குற்றங்களுக்குப் பொறுப்பான சகல தரப்பினரையும் கண்டறிவது அவசியம் என்பதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினரின் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும், மனிதப்புதைகுழி அடையாளங்காணப்பட்ட பகுதியை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக உரியவாறு பேணவும் வேண்டும்.

இலங்கையில் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு, தற்போதைய குற்ற மறுப்புக்கள் மற்றும் சர்வதேச நீதிப்பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்கமறுத்தல்என்பவற்றின்பின்னணியில், சில நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

அதன்படி செம்மணி, கொக்குத்தொடுவாய் மற்றும் மன்னார் என்பன உள்ளடங்கலாக அடையாளங்காணப்பட்ட மற்றும் சந்தேகிக்கப்படும் மனிதப்புதைகுழிகளைப் பொறுப்புடன் கையாள்வதற்குரிய சர்வதேசத்தினால் ஆணையளிக்கப்பட்ட பொறிமுறையைஉருவாக்கல்,மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளில் சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் விசாரணையாளர்கள் குழுவை உடனடியாக ஈடுபடுத்தல், மனித எச்சங்களைப் பாதுகாப்பதற்கும் ஆராய்வதற்கும்செய்மதிப்படங்கள்,தடயவியல் நிபுணத்துவ ஆராய்வு, டி.என்.ஏ பரிசோனை போன்றவற்றைப் பயன்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் அத்தகைய நடவடிக்கைகள் இலங்கையிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள், இனவழிப்பு என்பவற்றில் ஈடுபட்டவர்கள் பொறுப்புக்கூறலின்றிப் பாதுகாக்கப்படமாட்டார்கள் என்ற வலுவான செய்தியை வழங்கும் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மாற்றத்திற்கான நேரம் இது

நீதிமன்றங்களின்மெதுவானசெயல்முறைஇலங்கையில் நீண்ட காலமாக பொதுமக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. சட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து நீதிக்காக காத்திருக்கும் பலரும், இறுதியில் நியாயம் கிடைக்குமா என்ற ஐயத்தில் வழிகாட்டியோ இல்லையோ எனப் பின் வாங்கியிருப்பதும், சிலர் மாற்று நீதித் தேடல்களை நாடியிருப்பதும் வருத்தமளிக்கிறது.

2023 ஆம் ஆண்டு இலங்கை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை மத்திய நீதி அமைச்சு வெளியிட்டபோது, நிலைமை என்ன அளவிற்கு மோசமாக இருக்கிறது என்பது தெளிவாயிற்று. மஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் மட்டும் 805,502 வழக்குகள் நிலுவையில் இருந்தன. மொத்த நிலுவை வழக்குகள் 1.1 மில்லியனைத் தாண்டியுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கை உயர்ந்துவரும் நிலையில், 2024ல் அரசு நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து இந்த சுமையைச் சமாளிக்க முயற்சி செய்துள்ளது.

நீதித்துறையில் உள்ள மனிதவளப் பற்றாக்குறி இலங்கையின் நீண்டகாலப் பிரச்சனையாகவே இருந்து வருகிறது. ஒரு மில்லியன் மக்களுக்கு 50 நீதிபதிகள் இருப்பது தான் மேம்பட்ட நாடுகளில் சாதாரண அளவு. ஆனால் இலங்கையில் 2023 முடிய 19 நீதிபதிகள் மட்டுமே இருந்தனர். இது போல்தான் இந்நாட்டில் கடுமையான நீதி தாமதமும், வழக்குகள் காத்திருக்கும் காலமும் அதிகரித்து வருகின்றன.

இதையெல்லாம் தீர்க்கும் வகையில், 2017ம் ஆண்டு இலங்கை தகவல் தொடர்புத் தொழில்நுட்ப முகமை (ICTA) உதவியுடன் நீதித்துறை தானியங்கி மயமாக்கல் மற்றும் மென்பொருள் வசதிகள் கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை ஆரம்பித்தது. 2020ல் அதிகாரபூர்வமாக இது விரிவாக்கத்திற்கான திட்டமாக மாறியது. ஆனால், கொவிட் பெருந்தொற்று மற்றும் அதன்பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இதன் முழுமையான அமலாக்கத்தைத் தடுக்கும் சூழல் உருவாக்கின.

இந்நிலையில், புதிதாக பதவியேற்றுள்ள பிரதம நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேனாவின் தொடக்க உரை முக்கியமான சுட்டிக்காட்டாக உள்ளது. நீதித்துறையை புதுப்பித்து, மக்களுக்கு விரைவான மற்றும் நம்பிக்கையளிக்கும் நீதியை வழங்க, டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். இது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

இன்றைய அரசாங்கம் மொத்தமாகவே டிஜிட்டல் ரீதியான நவீனமயத்துவத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற சூழலில், நீதித்துறையும் அதே அடையாளத்தோடு மாற வேண்டும். வழக்குகளின் பதிவு, நியமனங்கள், விசாரணைகளின் ஒளிபதிவுகள், தீர்ப்புகளின் டிஜிட்டல் சேமிப்பு, வீடியோ வழக்குப் பரிசீலனைகள் உள்ளிட்டவை அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் நீதித்துறையில் நிலவும் ஊழல், தாமதம், மரபணுக்களையும் குறைக்க முடியும்.

மேலும், மாற்று தீர்வுக் கூறுகள் (Alternative Dispute Resolution), நிலைநாட்டும் வாரியங்கள் (Mediation Boards), கடன் சமரச வாரியங்கள் போன்றவையும் பலப்படுத்துப்பட்டு 2023ல் 69% விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, நீதிமுறை சுமையைக் குறைக்க இது ஒரு வலுவான வழியாக அமைந்துவிடும்.

முடிவாக, இலங்கை மக்களுக்கு சமத்துவமான, விரைவான, நம்பிக்கைக்குரிய நீதியை வழங்கும் நீதித்துறையை உருவாக்க இது போன்ற நவீன முன்னேற்றங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். நீதியின் பக்கமாகச் செயல்படும் அனைத்து அமைப்புகளும் இந்த மாறுதலுக்குப் பின்னணியாக நிற்க வேண்டும். நீதியின் ஒளி வெளிச்சமாவதற்கான வாய்ப்பை இப்பொழுதே நாம் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

# இலங்கை பூர்வீகத் தமிழர் ஆஸி. செனட் உறுப்பினர்

இலங்கையைப்பூர்வீகமாகக்கொண்ட கலாநிதி மிச்சேல் ஆனந்தராஜா ஆஸ்திரேலிய செனெட் சபைஉறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய செனெட் சபை உறுப்பினராக தமிழர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஆஸ்திரேலிய வரலாற்றில் பதிவாகியுள்ள இத்தெரிவு, அந்நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்களால் மிகமுக்கியத்துவம் வாய்ந்த அடைவாக நோக்கப்படுகின்றது.

1970 களின் தொடக்கத்தில் இலங்கையிலிருந்து லண்டனுக்கு புலம்பெயர்ந்த பெற்றோருக்குப் பிறந்தமிச்சேல், ஆஸ்திரேலியாவில் குடியேறுவதற்கு முன்னர் அவரது சிறுபராயத்தில் கணிசமானளவு காலம் சாம்பியாவில் வாழ்ந்தார்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய செனெட் சபைக்கு தெரிவானமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள மிச்சேல் ஆனந்தராஜா, தான் ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் மக்களின் கதைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அக்கதைகள் பெருமளவான தியாகங்கள் மற்றும் கடின உழைப்பில் இருந்தே உருவானதாகவும் தெரிவித்துள்ளார்.

## பிள்ளையான் குழு கொன்றவர்களைத் தேடி

# தம்பிலுவில் இந்து மயானத்தில் சிஐடியினர் அகழ்வுப் பணியில்



கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 18வயது மாணவன்பார்தீபன், முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் சு.ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் இந்து மயானத்தில் நேற்று சி.ஐ.டியினரால் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இனியபாரதி என்று அழைக்கப்படும் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ரராஜபக்சவின் ஒருங்கிணைப்பாளருமான புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை 2007-6-28ஆம் திகதி திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் ஜூலை 6 திருக்கோவில் மற்றும் மட்டு சந்திவெளி பகுதிகளில் வைத்து சி.ஐ.டி.யினர் கைதுசெய்தனர்.

இவர்களுடன் இனியபாரதியின் சகாக்களான முன்னாள் சாரதி செந்துரன், திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன், வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சபாபதி மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜுட் என்று அழைக்கப்படும் ரமேஷ்கண்ணா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த விசாரணையின் அடிப்படையில் 2009 ஜுலைமாதத்தில் திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவன் பார்தீபன், 2006 டிசெம்பர் 15 கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத், 2010 ஜனவரி 26ஆம் திகதி ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட ஆகியோர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து சி.ஐ.டிஃயினர் கைது செய்யப்பட்டவர்களை குறித்த மயானத்துக்கு கடந்த இரு தினங்களாக அஷ்-ழத்துச்சென்று சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களை அஷ்-டயாப்படுத்தினர்.

அதற்கமைய குறித்த அடையாளம் காண்பிக்கப்பட்ட பகுதிகளை சோதனை செய்வதற்கு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் சி.ஐ.டி.யினர் அனுமதி கோரியதையடுத்து நீதிவான் றிஸ்வான் முன்னிலையில் ஏற்;கனவே கைது செய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஜுட் என்று அழைக்கப்படும் ரமேஷ்கண்ணா அடையாளம் காண்பித்த இடத்தினை அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய அகழ்வுப் பணிகளில் எந்தவொரு சான்றுகளும் அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## கொலைக் குற்றவாளியான

# முன்னாள் அமைச்சர் பிரேமலாலின் மேன்முறையீட்டை ஏற்றது நீதிமன்று

2015 ஆம் ஆண்டு அரசுத் தலைவர் தேர்தலின் போது கஹவத்தையில், அப்போதைய அரசுத் தலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் பேரணியின்போது துப்பாக்கிச் சூடு நடத்தி, சாந்த தொடங்கொட என்ற நபரைக் கொலை செய்த குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட நான்கு பேரை விடுவித்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் இன்று அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு, குறித்த மேல்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது. மனுவைப் பரிசீலித்த பின்னர், நீதிபதிகள் ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ, மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது. பின்னர், மனு மீதான விசாரணை 2026 பெப்ரவரி 13 வரை ஒத்திவைக்கப்பட்டது.

பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட குற்றவாளிகளை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது என பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, அந்தத் தீர்ப்பை ரத்து செய்து, குற்றவாளிகளுக்கு மேல் நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை மீண்டும் உறுதி செய்ய வேண்டும் என மேன்முறையீட்டில் கோரப்பட்டுள்ளது.

# செல்லா காசு

என். சத்திய மூர்த்தி

தமிழர் பகுதிகளில், 4ஆவது ஆண்டு, கறுப்பு ஜீலை நினைவேந்தல் பலவாறாக அனுசரிக்கப்பட்டுள்ளது. அண்மை காலங்களில் தமிழர் தரப்புகள் முன்னெடுத்த பல்வேறு நிகழ்வுகளை போல், இவற்றிலும்; பத்து-பதினைந்து பேருக்கு மேல் எந்த ஊரிலும் கூடினாரில்லை. அல்லது, அதுதான் தமிழர் ஆதரவு யாழ்பாண பத்திரிகைகள் வெளியிட்ட புகைப்படங்கள் தெரிவித்த செய்தி.

ஏன், இனப்பிரச்சினையை அடுத்தடுத்த தலைமுறைகளிடம் கொண்டு சேர்த்த யாழ்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் மேற்படி நிகழ்ச்சியில் அதிக மாணவர்கள் பங்கு பெற்றதாக தகவல் இல்லை. அல்லது பத்திரிகைகளிலும் சமூக வலைதளங்களிலும் பதிவிடப்பட்ட புகைப்படங்கள் அவ்வாறான தோற்றத்தையே ஏற்படுத்தின.

இன்னும் சொல்லப்போனால், இந்த அனுசரிப்புகளின் நீளமும் ஆழமும், தமிழ் அரசியல் தலைவர்களின் அறிக்கைகளிலும் அவை குறித்த பத்திரிகை செய்திகளிலும் மட்டுமே தெரிந்தது. நடு வீதியில் அதன் தாக்கம் காணப்படவில்லை.

ஏன், செம்மணி புதைகுழிகளை ஐ.நா. மனித உரிமை ஆணையர் வோல்கர் டுர்க் பார்வையிட்ட தினத்தன்றுகூட தமிழ் தரப்பினரால் அதிக எண்ணிக்கையில் மக்களைக் கூட்ட முடியவில்லை. அங்கு வந்து சென்றவர்களில்கூட பெரும்பாலானவர்கள், வேடிக்கை பார்க்க வந்தவர்கள் என்றே எண்ணத் தோன்றியது.

கடந்த 2018ஆம் ஆண்டு, அப்போதைய பிரித்தானிய பிரதமர் டேவிட் கேமரூன், யாழ்பாணம் வந்தபோது, இனப்போர் காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அவருடைய வாகன அணிவகுப்பை தடுத்தி நிறுத்திய போராட்டம், உலகமெங்கிலும் பேசு பொருளானது. இன்னும் சொல்லப்போனால், பிரித்தானிய பிரதமரே, இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், இந்த பகுதிகளுக்கு பயணம் செய்த முதல் அரச தலைவர்.

கேமரூனின் வரவின்போது போரட்டத்திற்கு வழி செய்தவர்களே, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்தான் என்ற பேச்சு அப்போது பரவலாக இருந்தது. ஆனால், அதற்கு பின்னர், அவர்களால்கூட பெருமளவில் தமிழ் மக்களை களத்தில் இறங்கிப் போராட வைக்க முடியவில்லை என்பதும் உண்மை.

இதற்கு காரணம், இங்குள்ள அரசியல் கட்சி தலைமைகளும், புலம்பெயர்ந்தோர் அமைப்புகளும் உறங்குகின்றனவா? அல்லது, மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்களா? இதில் இரண்டாவதே உண்மை. அல்லது முதலில் வரும் பதில், மக்கள் விழித்துக் கொண்டதால், அதன் காரணமாக, இழுத்த இழுப்பிற்கு எல்லாம் ஆடுவதில்லை.

அதன் காரணமாக, கட்சித் தலைமைகளும் புலம்பெயர்ந்தோரும்கூட ஆர்வம் இழந்துவிட்டனர். போதாதற்கு அவர்களுக்கு இடையேயான முரண்பாடுகள். உள்குத்துகள். இதற்கு புலம்பெயர்ந்தோரும் விதிவிலக்கு அல்ல.

அவர்களிடையே உள்ள பிரச்சினைகளுக்கு அப்பால் சென்று, இங்கேயும் குறிப்பிட்ட சிலரை தங்களது பண பலத்தால் ஆதரித்து, அவர்களை காணாமல் போகச்செய்த பெருமை புலம்பெயர்ந்தோரையே சாரும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் இதுதானே நடந்தது?

### வெறும் கையை வைத்து

அண்மையில் அரங்கேறிய உள்ளாட்சி தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியே முன்னிலையில் வந்தது என்று பீற்றிக் கொள்கிறார்கள். உண்மை. ஆனால், அதுவும் வெறும் கையை வைத்து முழம் போடும் கதையே.

கடந்த ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் வெறுப்பை முயன்று சம்பாதித்ததால்தான், தமிழ்க் கட்சிகள் தோல்வி அடைந்தன என்று ஒரு கருத்து உள்ளது. அதனால்தான், தென்னிலங்கையை மையம் வைத்து ஆட்சியைப் பிடித்த இடதுசாரி ஜேவிபி, இங்கும் பல ஆசனங்களைப் பெற முடிந்தது. குறிப்பாக, யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்கு சதவீதத்திலும் முதல் இடத்தை பெற்றது. அதுவும் உண்மை. ஆனால், தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தாங்களே குழி பறித்துவிட்டோம் என்ற பச்சாதாபத்தால் மட்டும்தான், உள்ளாட்சி தேர்தலில் மக்கள மாற்றிக் குத்தினார்கள் என்று கருதுவது தவறு.

ஜேவிபியைப் பொறுத்தவரையில், தமிழர் பகுதிகளில், குறிப்பாக வட மாகாணத்தில் இன்னமும் வேரூன்றவில்லை. உள்ளாட்சித் தேர்தல்களோ, அடிமட்ட மக்களின் அபிலாஷ்ஷகளைப் பிரதிபலிக்கும் தேர்தல். அங்கு தற்போது வரையிலாவது, தமிழர் கட்சிகளே முன்னிலையில் இருந்து வருகின்றன என்பதே உண்மை. அவற்றில், தமிழ் அரசுக் கட்சி ஏனோ தானே என்று முன்னணியில் இருப்பதாக கருதுகிறது. அவ்வளவுதான்.

தற்போதைய இலங்கை தேசிய அரசியல் சூழலில், அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்களில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தீர்வுத் திட்டம் ஒன்றை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கா தலைமையிலான அரசு நிறைவேற்றினால்போதும். அதுவே, ஜேவிபி, தமிழர் பகுதிகளில் மீண்டும் துளிர்விட வழி செய்துவிடும். அல்ல, அல்ல. துளிர்விட்ட பின்னர் தற்போது வளர்ச்சி குன்றி இருக்கும் ஜேவிபி, இங்கு மீண்டும் தழைத்து வளரத் தொடங்கலாம்.

### ஆல் போல் தழைத்து

எது எப்படியோ, இங்கு தமிழ்க் கட்சிகள் எதுவுமே, சேர்ந்தோ, தனித்தோ, ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி வளரும் என்ற நம்பிக்கை இல்லை. தங்கள் காலத்திற்கு பின், தாங்கள் விட்டுப்போக இருக்கும் தமிழர் அரசியல் அமைப்பு குறித்து துளியாவது விடுதலை புலிகள் அமைப்பு சிந்தித்துச் செயல்பட்டிருந்தால் இந்த நிலை தோன்றி இருக்காது.

மாறாக, தாங்கள் தனி நாடு வாங்கித் தருவோம் என்று தமிழ் மக்களிடம் கூறி வந்த கதையை விடுதலை புலிகள் அமைப்பு தாங்களே நம்ப தொடங்கியதால்தான் இன்றைய நிலைமை தோன்றி உள்ளது. மாறாக, தாங்கள் ஒரு கொரில்லா அமைப்பாக பின்னிருந்து செயல்பட்டு, அடுத்தடுத்த அரசுகளுடன் பேச்சு நடத்துவதற்கு மிதவாதத் தமிழ் தலைமைகளை விடுதலை புலிகள் அமைப்பு தொடர்ந்து அனுமதித்திருந்தால் இந்த நிலைமை தோன்றி இராது. ஆனால் நடந்தது என்ன?

தாங்களே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று அறிவித்துக்கொண்டு, அதே போர்வையில் விடுதலை புலிகள் அமைப்பு தங்களது தீவிரவாத செயல்களையும் தொடர்ந்து முன்னெடுத்து வந்தார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், தென்னிலங்கையில் தீவிரவாத செயல்கள், தமிழ் மக்களை தங்கள் பக்கம் தொடர்ந்து வைத்திருப்பதற்கு அவசியமாயிற்று.

அதேசமயம், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என்ற அந்தஸ்து, விடுதலை புலிகள் அமைப்பு, இலங்கை அரசு மற்றும் சர்வதேச சமூகத்துடன் உறவாடுவதற்கான லைசென்சாக இருந்தது. இதற்கிடையில், அரச தரப்புடனான இனப்போர், எதிர்காலத்தில் தங்களுக்கு என்று ஒரு நாடு, அதற்கு ஒரு மக்கள், அவர்களுக்கு என்று தங்களது ஆட்சி என்ற வகையிலேயே அவர்களுடைய செயல்பாடுகள் விரிந்தன.

### முதல் கோணல்

தனக்கு என ஒரு நாடு, அதற்கு என மக்கள், அவர்களுக்கு துப்பாக்கி முனையில் நல்லாட்சி வழங்க போவதான வாக்குறுதி அல்லது எதிர்பார்ப்பு. இந்தப் பின்னணியில், முதல் கோணல் முற்றும் கோணலாக மாறியதில் ஆச்சரியம் இல்லை.

இனப் போரில் படுதோல்வி, அதனைத் தொடர்ந்து தமிழர் அரசியல் தலைமையில் ஒரு வெற்றிடம், அதை நிரப்பிவிட்டதாக நினைத்து ஆணவப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு, சாயம் வெளுத்த பின்னர் அவர்களது உள்குத்துகள் மற்றும் பிரிவுகளும் பிரிவினைகளும்... இதுதானே, விடுதலை புலிகள் அமைப்பு தமிழ் சமூகத்திற்கு விட்டுசென்ற எச்ச-சொச்சம்.

இதற்கிடையில், விடுதலை புலிகள் அமைப்பு குறிப்பாக புலம்பெயர்ந்தோரை அடித்துப் பிடித்து வாங்கிய 'வரி பணம்' பல கோடி ரூபாய் மற்றும் அவர்கள் இலாபகரமாக மேலை நாடுகளில் நடத்திய பிஸினஸ்கள் ஆகியவற்றை வைத்து கொஞ்ச காலம் படம் காட்டி வந்தவர்கள், மக்கள் பழசை மறக்க துவங்கியதும் தங்களது இன அரசியலையும் ஏறக் கட்டி விட்டார்கள். என்ன. இந்த நாட்டிலும், அண்டையில் தமிழ் நாட்டிலும் ஒரு சில அரசியல்வாதிகளுக்கு மட்டும் 'ஆதரவு' செய்து வருகிறார்களோ என்ற சந்தேகம் மட்டுமே மிஞ்சுகிறது.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில், செம்மணி குறித்து அறிந்த மக்களோ, ஏன் அரசியல்வாதிகளோ பத்திரிகையாளர்களோ அற்பசொற்பமே. இந்தப் பிரச்சினை குறித்து அறிந்தவர்களுக்கும் அது ஒரு பேசுபொருள் மட்டுமே. பழைய உணர்வுபூர்வ ஈடுபாடு எதுவுமே இல்லை. ஆனாலும், தமிழ் நாட்டை மையப்படுத்தி இன்னமும் இங்கு அரசியல் செய்வோர்கள் உள்ளனர்.

தமிழகத்திலுள்ள ஆளும் வர்கத்தினரான, திமுக, அஇஅதிமுக ஆகிய இரண்டு பெரும் கட்சிகளைச் சாராத குட்டி தேவதைகளின் ஆதரவு அறிக்கைகளை புலம்பெயர்ந்தோரில்சிலர் பெரிதுபடுத்திவருகின்றனர். ஆனால் அந்த அறிக்கைகளின் எண்ணிக்கையும்கூட குறைவாகவே உள்ளன.

### பொறுப்புக்கூறல்

என்றாலும், அண்மையில் பிரான்ஸ் நாட்டில், ஒரு நகரில் விடுதலை புலிகள் அமைப்பின் அறிவுஜீவி அன்ரன் பாலசிங்கத்தின் சிலையை நிறுவி அங்குள்ள புலம்பெயர்ந்தோர் மரியாதை செய்துள்ளனர். அது போன்றே அவ்வப்போது, விடுதலை புலிகளின் நினைவு குறித்து யூடியூப் சேனல்களுக்கு சிலர் பேட்டி தருகிறார்கள். இவை எதுவுமே அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்லவில்லை.

இந்தப்பின்னணியில், இனபிரச்சினையை முன்னிறுத்தி இன்னமும் இங்கு அரசியல் செய்வோர் இனியாவது, அது செல்லா காசாக மாறி வருவதை உணரவேண்டும். அதற்கு தங்களது பங்களிப்பை ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களிடம் பொறுப்புக் கூறவேண்டும்.

அவர்களுடைய கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலான செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் வைத்து நோக்கும்போது, இனப்பிரச்சினையை வைத்து அரசியல் முதல் எடுப்பது தங்களது ஏகபோக உரிமை என்று கருதுவதாகவே தெரிகிறது. அதன் மறுபக்கத்தில், அதே இனப்பிரச்சினையை வேறொரு விதத்தில் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் அங்குள்ள பேரினவாத வாக்காளர்களை குறிவைப்பதை மட்டுமே தமிழ் தலைவர்கள் எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான்.



உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# ஆலாலசுந்தரரை அகத்தினில் இருத்துவோம் !

## (இன்று சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம்)

இறைவன் மீது தோழமை உணர்வுடன் இப்பூவுலகில் வாழ்ந்தவர்தான் ஆலாலசுந்தரர் என்று அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரர் பூமியில் பிறந்த வரலாறு தேவ உலகுடன் , எம்பெருமான் சிவனுடன் இணைந்த வரலாறாகக் கருதப்படுகிறது. இறைவனுக்குத் தேவ உலகில் அணுகு தொண்டராக இருந்தவர் – மனந்தடுமாறி பேரின்பச் சூழலை மறந்து சிற்றின்பத்துக்குள் மனதினைச் செலு த்திய காரணத்தால் பூவுலகில் பிறவி எடுக்கும் நிலைக்கு ஆளா கிறார். தேவ உலகில் இவரின் சிந்தையினைக் கலைத்த பெண்களும் பூவுலகில் பிறக்கும் நிலை ஏற்படுகிறது. சிற்றின்ப ஆசைகளுக்கு உரிய இடம் பூவுலகமே ஆனதால் சுந்தரரின் சிற்றின்ப உணர்வு களைப் பகிர்வதற்கு – அவருக்குச் சலனத்தை ஏற்படுத்திய பெண் களே துணையாகவும் வந்து அமைகிறார்கள். அவர்களை மணந்து சுந்தரர் – தான் வந்தவேலை முடிந்தவுடன் – எங்கு முன்னர் இருந் தாரோ அங்கேயே போகிறார் என்பதுதான் ஆலாலசுந்தரரின் வரலா றாய்ப் படிக்கின்றோம்.

கதைகளை நம்பலாமா என்று எண்ணத் தோன்றுகிறது. கதைகள் எப்படி இருந்தாலும் கதைகளூடாகப் புலப்படுகின்ற கருத்துக்களை த்தான் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். காமனையே தகனம் செய்த இடத்தில் காதலுக்கு இடமே இல்லை. காதல் கொண் டால் தண்டனை அனுபவிக்க வேண்டும், தண்டனைதான் பூவுலகில் வந்து பிறப்பது. பூவுலகுதான் காதலுக்கும் , சிற்றின்பத்துக்கும் ஏற்ற இடமாகும்.சிற்றின்பத்தை அனுபவிக்கும் வேளை பேரின்பம் பற்றிய புரிதல் வரும். வருவதற்கு பேரின்ப மயமான அந்தப் பெரும் பொ ருளை , பரம்பெருளைப் பற்ற வேண்டும். பற்றும் நிலையும் பல இருக்கிறது. அதில் ஒரு நிலை நட்பு நிலையாகும். அதாவது அந்தப் பரம்பொருளை நண்பனாகக் கொண்டு அவனிடம் அடைக்கலம் புகுவ தேயாகும். அதைத்தான் ஆலாலசுந்தரர் இப்பிறவியில் கையாண்டார்.

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதாமார்க்கம் மென்றுஞ்சங் கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்

என்று சிவஞானசித்தியார் – இறைவன்மீது அடியார் கொள்ளும் பக்தி நிலை பற்றிக் காட்டுவது நோக்கத்தக்கது.

அந்தணராய் பிறந்தார்.அரசனாய் வளர்ந்தார்.ஆடம்பரமான வாழ்வினை வாழ்ந்தார். அப்பரைப் போலவோ , மணிவாசகரைப் போலவோ ஆலாலசுந்தரர் வாழ்ந்தவராகத் தெரியவில்லை. சுந்தரரைக் காட்டும் அத்தனை படங்களுமே அவர் அணி மணிகளுடன் ஆட ம்பரமாய் அரசிளங்குமரனாகவே இருப்பதாகவே அமைந்திருக்கி ன்றன. அப்பரையோ மணிவாசகரையோ காட்டும் படங்கள் அத்த னையும் எதுவுமே இல்லாத துறவுக் கோலத்தில் இருப்பதாகவே அமைந் திருப்பதையும் காணமுடிகிறது.ஆனாலும் சுந்தரர் இறை வனின் நண்பனாக விளங்கி – தான் விரும்பிய அனைத்தையும் உரிமையுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டார் என்றும் அவரின் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவர் மணக்கோலத்தில் வருகிறார். பெண்வீட்டாரும் வருகிறார்கள். அந்த ஆனந்தமான வேளையில் சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல – ஒரு கிழப்பிரா மணர் உள்ளே வந்து விடுகிறார். புதிய புரட்சியை அவர் உருவாக்கி விடுகிறார். 'திருமணம் செய்ய இருக்கும் மணமகன் சுந்தரன் – தனக்கு அடிமை ' என்று ஒரு குண்டைப் போட்டு விடுகிறார். திருமணத்தை காண வந்தவர்கள் திகைக்கிறார்கள் ! மணமகன் அடிமையா ? என்ன வினோதம் என்று யாவரும் முணுமுணுக்கி றார்கள். வந்த கிழப்பிராமணரோ பிடித்த பிடியாக ' சுந்தரன் எனக்கு அடிமை ' என்று அடித்துச் சொல்லி – அதற்கான எழுத்து ஆதார த்தையும் காட்டுகிறார். சபையினரால் எதுவுமே செய்ய முடிய வில்லை. மணமகன் கோலத்தில் இருந்த சுந்தரர் ' நீர் என்ன பித்தனா அல்லது பேயனா – மனிதனுக்கு மனிதன் அடிமையா ? ' இது முறையற்றது என்று துள்ளிக் குதிக்கிறார்.ஆனாலும் கிழப்பிரா மணரின் பக்கம் வலுவாய் இருப்பதால் யாவரும் அவரையே பார்த்தபடி செயலற்று நிற்கிறார்கள். உஷாரான கிழப்பிராமணர் ' இந்த வழக்கினைத் தீர்க்க இந்த இடம் பொருத்தம் அல்ல – நான் இருக்கும் திருவெண்ணை நல்லூர்தான் பொருத்தம் என்று கூறி ' சுந்தரர் பின் தொடர திருவெண்ணை நல்லூர் செல்கிறார். அங்குள்ள கோவிலுக்குள் சென்ற அந்தணர் மறைகிறார். அனைவரும் திகைக் கின்றனர். எம்பெருமான் காட்சி தருகிறார். சுந்தரர் தெளிவு பெறு கிறார். ' என்னை எப்படிப் பேசினாயோ அப்படியே சொற்றமிழால் சுந்தரா பாடு – உன் பாட்டே எனக்கு உகந்த அர்ச்சனை ஆகும் ' என்கிறார் இறைவன். சுந்தரர் வாயிலிருந்து செந்தமிழ் அருவியாய் பெருக்கெடுக்கிறது. இறைவனை எந்தவார்த்தையால் திட்டினாரோ அதே வார்த்தையையே வைத்து

**பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை**
**நல்லூர் அருட்துறையுள்**
**அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே**

என்று மனங்கசிந்துருகிப் பாடிப்பரவி நின்றார். நாயேன் பலநாளும் உன் நினைப்பின்றி இருந்தேன்.அதனால் பேயாய் திருந்தேன்,நீ பொன்னாய் , மணியாய் , வயிரமாய் இருக்கின்றாய் நானோ உன்னை மறந்தே இருந்திருக்கிறேன்.ஊனாய், உயிராய், உடலாய், உலகாய், வானாய், நிலனாய், கடலாய், மலையாய், நீயே இருக்கிறாய். நானோ உனை அறியாமல் இருந்து விட்டேன்.

என்று தம்மைத் தடுத்தாட்கொண்ட நிலையில் சுந்தரர் மெய்யுருகிச் செந்தமிழால் பரம்பொருளைப் பாடி நிற்கிறார்.உனக்கு நான் ஏற்க னவே அடியவன் என்பதை மறந்துவிட்டேன் . நீ வந்து தெளிவு படுத்தி என்னை உனது மீளா அடைமையாய் ஆக்கி – என்னை மீட்டெடுத்தாயே பரம் பொருளே என்று ஏங்குவதும் , இரங்குவதும் சுந்தரர் நிலையால் வெளிப்பட்டு நிற்கிறது எனலாம். ஆண்டவனின் பரீட்சை அடியவனைக் கடைத்தேற்றியதை இங்கு கண்டு தெளிகி றோம்.

திருமணம் தொடக்கத்தில் இப்படியெல்லாம் நடந்திருக்குமா என்று கேள்விகள் கேட்டு குழம்புவதில் பயனில்லை. தனது அடியானைத் தடுத்தாட் கொள்ள நடந்த ஒரு அற்புதம் என்றுதான் இதனைக் கொள்ள வேண்டும். எங்களுக்கும் இப்படி வாழ்க்கையில் பல சந்தர்ப் பங்களை அந்தப் படைத்தவன் செய்து காட்டியிருப்பான் என்பதை நினைத்துப் பார்த்தால் சுந்தர் கதை நன்றாகவே விளங்கும் என எண் ணுகிறேன்.

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தர் பின்னர் சங்கிலியார் , பரவையார் என்னும் பெண்களை மணமுடிக்கிறார். பூவுலகில் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிக்கிறார். அவரின் விருப்பங் களுக்கு ஆண்டவனும் நண்பனாய் இருந்து அருள்பாலிக்கிறார் என்பதும் சுந்தரர் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரர் பற்றிய கதைகள் பலவற்றைக் கேட்கும் நாம் – சுந்தரரின் முக்கியத்துவம் பற்றி நோக்குவதுதான் மிகவும் அவசியமாகும். அவற்றையே அகம் இருத்துவதுதான் முறையானதாகும் என்று கருதுகிறேன்.சுந்தரரின் தடுதாட் கொண்ட கதையில் மனம் லயிக்கும் நாங்கள் சுந்தரரின் பங்களிப்பை பற்றிப் பெரிதும் பார்ப்பதே இல்லை. ' பித்தா பிறை சூடி ' என்னும் பதிகத்தையும் ' மீளா அடிமை உனக்கே ஆளாய் ' என்னும் பதிகத்தையும் பாடி நிற்கும் அளவிலேயே சுந்தரரை விட்டு விடுவோம்.ஆனால் அதற்கு அப்பாலும் சென்று சுந்தரரை நாம் பார்க்க வேண்டும் என்பதுதான் எனது மனக்கிடக் கையாகும்.

சம்பந்தர் , அப்பர் காலம் போல் சுந்தரர் காலம் அமையவில்லை. சம்பந்தருக்கும் அப்பருக்கும் புறச்சமயங்களின் எதிர்ப்பலைகள் நிறையவே இருந்தன. அவர்களின் பணிகள் அனைத்துமே – புறச்சமயங்களின் எதிர்ப்பினின்று சைவத்தை 'மேன்மை கொள் சைவமாக ' மிளிர்ந்திடச் செய்ய வேண்டும் என்னும் வகையிலே அமைந்தது எனலாம். அதற்காகவே அவர்கள் அடியவர்கள் புடைசூழ பக்தியென்னும் புரட்சியை சமூகத்தில் நடத்திக் காட்ட வேண்டிய வர்களாகவே செயற்பட்டார்கள். ஆனால் சுந்தரர்காலம் அப்படி இல்லாத காரணத்தால் சுந்தரரின் பக்திப் பாடல்கள் நோக்கும், போக் கும் வித்தியாசமாய் அமைந்தது என்பது கருத்திருத்த வேண்டியது முக்கிய.ம் எனலாம்.

சுந்தரர் இக இன்பங்களில் திளைத்தவராகவே இருந்திருக்கி ன்றார்.ஆனால் எந்த நிலையிலும் இறைவனை மறவாதவராக , இறைபுகழ் பாடுபவராக , இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத் தக்கது.துறவையோ , வெறுப்பையோ அவரது பக்திப் பனுவல்கள் காட்டுவதாக இல்லை எனலாம்.இயற்கையினை மிகவும் நேசித்துப் பாடுகிறார்.இரந்து நின்று பாடிப் பரிசில் பெறும் நிலையினை அவர் சாடுகிறார்.தனக்கு வேண்டியவற்றை இறைவனிடம் நண்பனாய் கேட்டே பெறுகின்றவராய் சுந்தரர் இருக்கின்றார்.

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்**
**சார்கி னுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்**
**ஏத்த லாம்இடர் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்**
**கியாதும் ஐயுற வில்லையே**

என்றுவித்தியாசமாய்சிந்தித்துப்பாடுவது சுந்தரரின் முக்கியத்துவம் எனலாம்.அதாவது ' தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும் , சார்ந்து நின்றாலும்,பொருள்தர மனம் வராத பொய்மையயான வாழ்வு உடைய செல்வரைப் பாடாமல், சிவனுடைய கோவிலைப் பாடுங்கள்,இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம்; மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயம் இல்லை ' என்பதேயாகும்.

' வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை – வீமன் , அருச்சுனன் என்று புகழ்வதில் எந்தப் பயனுமில்லை; கொடுக்க மனம் இல்லா தவனைப் பாரி என்று புகழ்ந்து கூறினாலும் கொடுபவர் இல்லை. மூத்துத் தளர்ந்து உடல் நடுங்கும் கிழவனாகிய செல்வனை – மலை போன்ற தோள் உடையவன் என்று புகழ்ந்து வாழ்த்துவதால் பயன் இல்லை.வஞ்ச நெஞ்சனை , கொடியவனை, பாவியை,



கெட்டவனை , சாது என்று கூறிப் பாடுவதால் பயன் இல்லை.ஈயாத உலோபியை வள்ளல் என்றும் , கல்வி இல்லாதவனைக் கல்வி வல்லவன் என்றும் , புகழ்ந்து காலம் கழிக்காதீர்.எம்பெருமான் சிவனைப் பாடிப் பயன் பெறுங்கள் ' என்று காட்டும் பாங்கு சுந்தரரின் வித்தியாசமான சிந்தனையினையினை வெளிக்காட்டி நிற்கிறதல்லவா!

சம்பந்தர், அப்பர், மணிவாசகர் செய்யாத ஒரு காரியத்தைச் சுந்தரர் செய்து தமிழ்ப் பக்திப் பரப்பில் முக்கியத்துவத்தைப் பெற்று நிற்கிறார். தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் எனத்தொடங்கும் ' திருத்தொண்டத் தொகையினை ' அளித்தமை எனலாம்.சுந்தரரின் இந்தக் கொடை மட்டும் கிடைக்கா விட்டிருந்தால் – நாங்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் சைவத்தின் அறுபத்து மூவரும் வந்திருக்கவே மாட்டார்கள். அவர்களின் இறை அனுபவங்களையும் நாம் அறியும் வாய்ப்பும் எமக்கு வாய்த்திருக்காது. அந்த பெருவாய்ப்பினை நாம் இன்று பெற்றிருப்பதற்கு அத்திவாரமே சுந்தரர்தான் என்பதை மனமிருத் துதல் அவசியமாகும்.

சுந்தரரின் திருத்தொண்டர் தொகை இல்லையேல் – பெரியபுராணம் வந்திருக்காது. சேக்கிழார் என்னும் தெய்வப்புலவர், செந்தமிழ் புலவர் – இறை அடியார்களை எங்கள் கண்முன்னே கொண்டுவந்து காட்டி யிருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்காது. சிந்தாமணியில் மூழ்கிய சோழ மன்னனும் சிவனின் திருவருளை அறிந்திருக்க மாட்டான்.

பெரியபுராணம் என்னும் சைவத்தமிழ் காப்பியம் இன்று சைவவ த்துக்கே பெரும் பொக்கிஷமாய் திகழ்கிறது என்றால் அதற்கு மூலகாரணமே ஆலாலசுந்தரர் தான் என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. ஆலயங்கள் தோறும் அடியார்களின் திருவுருவச் சிலைகள் வைக்கப்பட்டு , உரிய காலங்களில் குருபூஜை செய்யப்பட்டு, திருவீதி உலா வருவதற்கும் ஆலாலசுந்தரப் பெருமானே அடித்தளம் இட்டார் என்பது பெரு முக்கியத்தைத்தை உணர்த்து கிறதல்லவா !

**தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும்**
**நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாஒன்றே**
**ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குஉயிரும்**
**தான்படிக்கும்அனுபங்காண்தனிக்கருணைப்பெருந்தகையே**
**' வாழி திருநாவலூர் வந்தொண்டர் பதம் போற்றி '**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2025இல் வெளியிடப்பெற்றது